DECEMBER 2023 **U/ID 33220/UNT4A**

Time : Three hours Maximum : 75 marks

பகுதி அ — ($10 \times 2 = 20$ மதிப்பெண்கள்)

கீழ்வரும் வினாக்களுக்கு எவையேனும் பத்திற்கு மட்டும் 30 சொற்களில் விடை தருக.

1. மரபு வழிச் சாதனம் என்றால் என்ன?

2. வெளிப்புறச் சாதனங்கள் என்பது யாது?

3. துணிவுடைமையின் அவசியத்தை எழுதுக.

4. இதழியலில் படி எடுத்தல் என்பது யாது?

5. சீழ்க்கை ஒலி குறித்து எழுதுக.

6. அச்சுப் பொறியைக் கண்டு பிடித்தவர் யார்?

7. தமிழின் முதல் இதழ் எது?

8. பாரதியார் துணை ஆசிரியராகப் பணியாற்றிய இதழ் எது?

9. செய்தி விளக்கம் தருக.

10. செய்தி வகைகளை எழுதக.

11. இதழாசிரியரின் பணிகள் யாவை?

12. தமிழில் மொழி நடை நூலை உருவாக்கியவர் யார்?

பகுதி ஆ — ($5 \times 5 = 25$ மதிப்பெண்கள்)

கீழ்வரும் வினாக்களுள் எவையேனும் ஐந்திற்கு மட்டும் 200 சொற்களில் விடை தருக.

13. இதழ்களின் பொது அறங்கள் குறித்து எழுதுக.

14. பத்திரிக்கை மன்றத்தின் செயல்பாட்டினை விளக்குக.

15. இதழியலாளரின் அடிப்படை விதிகளை விளக்குக.

16. இந்திய விடுதலை இயக்கத்தில் இதழியலின் பங்கினை விளக்குக.

17. தமிழ் இதழ்களின் தோற்ற நிலையை விளக்குக.

18. செய்திலாளருக்கான தகுதிகளை எழுதுக.

19. அச்சுப்படி திருத்துவோரின் பொறுப்புகளை எடுத்துரைக்க.

பகுதி இ — ($3 \times 10 = 30$ மதிப்பெண்கள்)

கீழ்வரும் வினாக்களுள் எவையேனும் மூன்றிற்கு மட்டும் 500 சொற்களில் விடை தருக.

20. இதழியலின் வகைகளை விவரிக்க.

21. இதழியலாளரின் பொறுப்புகளை தொகுத்துரைக்க.

22. தற்காலத் தமிழ் இதழ்களின் நிலையைக் கட்டுரைக்க.

23. செய்தித் திரட்டும் முறையினை விவரிக்க.

24. இதழியலின் மொழி நடை சிறப்புக் கூறுகளை ஆராய்க.

———————